**(Chapter XXIII code of Criminal Procedure Code)**
**IN THE COURT OF DOMESTIC VIOLENCE ACT, COIMBATORE.**

**Calendar** **DVA No: 243**
**Miscellaneous**
**Preliminary Register**

**Prosecution** ம.சா. **4**

**Name** : குல்சன் ஜெயின்

Father's Name :
Village
Taluk :
Calling
Religion :
**Age** :
Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1872 of the day or

**23-01-2020**

முதல் விசாரணை

சாட்சி ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டது- 2000 ம் ஆண்டில் மனுதாரருக்கும் 1 ம் எதிர்மனுதாரருக்கும் திருமணம் செய்ய பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. ஆனால் முதலில் மனுதாரர் 1 ம் எதிர்மனுதாரர் உடல் பருமனாக இருப்பதாலும் எங்களை விட அதிக வசதியுடன் இருப்பதாலும் திருமணத்திற்கு மறுத்தார். மனுதாரர் பெங்களுரில் படித்துக் கொண்டிருந்ததால் 1 ம் எதிர்மனுதாரரும் மனுதாரரும் அடிக்கடி பார்த்து கொண்டு பழகி வந்தனர். 1 ம் எதிர்மனுதாரர் மனுதாரரை திருமணத்திற்கு சம்மதிக்க வைத்தார். மனுதாரர் வெளிநாடு சென்று மேற்படிப்பு படிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் இருந்ததால் 1 ம் எதிர்மனுதாரர் அவரிடம் தான் அமெரிக்காவிற்கு 2 வருடங்கள் செல்ல இருப்பதாகவும் அவரை மேற்படிப்பு படிக்க வைப்பதாகவும் சொல்லி திருமணத்திற்கு சம்மதிக்க வைத்தார். இதற்கு 1 ம் எதிர்மனுதாரரின் குடும்பத்தாரும் ஒப்புதல் அளித்தனர். மனுதாரருக்கும் 1 ம் எதிர்மனுதாரருக்கும் கோவையில் வைத்து

30.06.2001 ல் திருமணம் நடைபெற்றது. திருமணத்தின் போது மனுதாரருக்கு 1 1/2 கிலோ தங்கமும், 15 கிலோ வெள்ளியும், 7 லட்சம் ரொக்கமாக கார் வாங்குவதற்காகவும், 10 லட்சம் மதிப்பிலான வீட்டு உபயோகப் பொருட்களும் எதிர்மனுதாரரின் குடும்பத்திற்கு கொடுத்தோம். திருமணத்திற்கு பின் மனுதாரருடன் எதிர்மனுதாரர்களும் சாய்பாபாக காலனியில் கூட்டுக்குடும்பமாக வசித்து வந்தார்கள். அப்போது மனுதாரர் எங்களுடன் போனில் பேசுவார். ஒரு நாள் இரவு மனுதாரர் என்னுடன் போனில் பேசிய போது 2ம் எதிர்மனுதாரர் குடித்து விட்டு வந்து மனுதாரரிடன் தவறாக நடக்க முயற்சித்தாகவும், அப்போது மனுதாரர் வேறு அறைக்கு ஓடி விட்டதாகவும் அந்த சமயத்தில் தான் எனக்கு போன் செய்ததாகவும் சொன்னார். மனுதாரர் காவல் நிலையத்தில் புகார் அளிப்பதாக எங்களிடம் சொன்ன போது வெளியில் தெரிய வேண்டாம் என்று சொல்லி நாங்கள் வேண்டாம் என்று சொல்லி விட்டோம். அதன் பின் மனுதாரரும் 1ம் எதிர்மனுதாரரும் தனிக்குடித்தனம் சென்று விட்டனர். மனுதாரருக்கு குழந்தை பிறக்காததால் அவரது மாமியாரும் நாத்தனாரும் அவரை கொடுமை செய்ய ஆரம்பித்தார்கள். 4ம் எதிர்மனுதாரருக்கு குழந்தை பிறந்து விட்டதால் மனுதாரர் குழந்தை பிறக்க வேண்டி மருத்துவரிடம் சிகிச்சை பெற வேண்டி மனுதாரரும் 1ம் எதிர்மனுதாரரும், 6ம் எதிர்மனுதாரரும் சென்றார். அப்போது பரிசோதனை செய்து விட்டு மருத்துவர் மனுதாரருக்கு எதுவும் பிரச்சனை இல்லை என்றும் 1ம் எதிர்மனுதாரருக்கு தான் பிரச்சனை இருப்பதாகவும் சொன்னார். அதனால் 1ம் எதிர்மனுதாரருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. இது பற்றி மனுதாரர் 3ம் எதிர்மனுதாரரிடம் கூறிய போது 1ம் எதிர்மனுதாரர் கோபமுற்று மனுதாரரை திட்டினார். திருமணமாகி 1 1/2 வருடம் கழித்து மனுதாரர் கர்ப்பமானார். அதற்காக நாங்கள் ஒரு விழா நடத்தி மனுதாரரை பாம்பேக்கு அழைத்து சென்றோம். அங்கும் மனுதாரருக்கும், 1ம் எதிர்மனுதாரருக்கும் போனிலேயே வாக்குவாதம் வந்து மனுதாரருக்கு மன உளைச்சல் உண்டானது. இதன் காரணமாக மனுதாரர் இரு

குழந்தைகள் கருவுற்றிருந்த போது 1 குழந்தை இறந்தது. 1 குழந்தை 07.12.2004 அன்று பிறந்தது. குழந்தை பிறந்த பின் 3 மற்றும் 6 எதிர்மனுதாரர்கள் குழந்தைக்கும் மனுதாரருக்கும் என்ன செய்யப்போகிறீர்கள் என்று எங்களிடம் கேட்டார்கள். அப்போது 4ம் எதிர்மனுதாரரின் தம்பி மனைவிக்கு குழந்தை பிறந்த போது அவர்கள் வீட்டில் என்னென்ன கொடுத்தார்கள் என்று சொல்லி ஒப்பிட்டுப் பேசினார்கள். என் தகப்பனார் டெக்ஸ்டைல் தொழில் நல்ல முறையில் செய்து வந்ததால் நாங்களும் 1/2 கிலோ தங்கமும் 5 கிலோ வெள்ளியும் கொடுத்தோம்.

வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்பட்டது.

(சாட்சி ஆங்கிலத்தில் சொல்ல என்னால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டது )